1st March 1969]

Distribution of rice.

* 82 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Food and Agriculture be pleased to state :

(a) whether first sort rice was distributed as second sort rice in Madras City in October 1968;

(b) the quantity of rice so distributed; and

(c) the loss incurred thereby?

அரிசி வினியோகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968 அக்டோபரில் சென்னை நகரில் முதல்தர அரிசியை இரண்டாம் தர அரிசி என வினியோகிக்கப்பட்டதா ?

(இ) எவ்வளவு அரிசி வினியோகிக்கப்பட்டது ?

(உ) அதனால் எவ்வளவு நட்டம் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். முதல் தர புழுங்கல் அரிசி இரண்டாந்தர விலைக்கு வினியோகிக்கப்பட்டது.

(இ) 9,286 டன் அரிசி வினியோகிக்கப்பட்டது.

(உ) அப்படி விற்றதினால் அரசுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 46.50 நஷ்டம் ஏற்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த சென்னை நகரத்திலுள்ள பாக்கியசாலிகளுக்குத் தேர்தல் வரும் போதெல்லாம் முதல் தர அரிசி இரண்டாம் தர அரிசியாக விற்கும் படி இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ராஜ்யத்திலுள்ள மற்றவர்களுக்கும் இந்த பாக்கியத்தை அரசு உண்டாக்காதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் எதிர்க் கட்சித் தலைவர் அதற்கு அரசியல் நோக்கம் கற்பிக்கிறார்கள். உண்மை அதுவல்ல. குறுவை அறுவடையாகி வருவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அதைச் செய்யாவிட்டால், 'படி அரிசி ரூபாய்க்கு என்று சொல்லிவிட்டு கைவிட்டு விட்டார்களே என்று குறை கூறுவார்கள்' என்றுதான் எப்படியும் அந்த விலைக்குப் போடவேண்டுமென்று அப்படிச் செய்யப்பட்டது.

Hospitals visited by the Public Health Minister.

* 83 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(a) the number of hospitals visited suddenly by the Public Health Minister from 6th March 1967 to 31st December 1968; and

(b) the defects found by him during the visits?